# மேல் மாகாண மாகாண சபை - சபைக் கூட்டம்

**2016 செப்டெம்பர் மாதம் 06 ஆந் திகதி மு.ப. 09.30 க்கு**

## நிகழ்ச்சி நிரல்

**I.** **தவிசாளரின் அறிவிப்புக்கள்**

**II.** **அறிக்கைகளையும், ஆவணங்களையும், சமர்ப்பித்தல்**

**III.** **செயற்குழுக்களின் அறிக்கைகளைச் சமர்ப்பித்தல்**

**IV.** **மனுக்கள்**

**V.** **கேள்விகள**

**01.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி தொடர்பான அமைச்சரிடம்** 2016.07.18 **ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/57)**

அ. மேல் மாகாணத்தின் ஒவ்வொரு அரசியல் தொகுதிகளிலும் 2009/01/01 ஆந் திகதியில் இயங்காமல் இருந்த;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

ஆ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இது வரை வருடாந்தம் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

இ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இன்று வரை வருடாந்தம் மூடப்பட்ட;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை யாவை ?

ஈ. முறையே 2009 ஆம் ஆண்டு தொடக்கம் தொடர்ச்சியாக இது வரை நட்டத்துடன் இயங்கும்;

i. பிரதேச கூட்டுறவுகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு ?
ii. கூட்டுறவு கிராமிய வங்கிகளின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு?
iii. சுப்பர் விற்பனை நிலையங்களின் எண்ணிக்கை எத்தனை ? அவை எவை ? வருடாந்த நட்டம் எவ்வளவு?

**02.** **கௌரவ கே.டி. அறுணதீபால் உறுப்பினரினால் வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வியாபாரம், வீடமைப்பு நிர்மாணம், தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் கைத்தொழில் மற்றும் கிராம அபிவிருத்தி அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/72)**

அ. i. 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 யூன் வரையிலான காலத்தினுள் மூடப்பட்டிருந்த மற்றும் நட்டமடைந்த கூட்டுறவு பிரதேசங்கள் / கிராமிய வங்கிகள் / சூப்பர் விற்பனை நிலையங்கள் என்ற ரீதியில் மூடப்பட்டமைக்கு காரணமான விடயங்களை ஆராய்ந்து பார்ப்பதற்கு ஏதாவது நடவடிக்கை ஒன்று எடுக்கப்பட்டுள்ளதா ?

ii. அது என்ன நடவடிக்கை ?

iii. வெளிப்படுத்திக் கொண்ட காரணம் என்ன ?

iv. அந்த வெளிப்படுத்திக் கொள்ளப்பட்ட காரணங்களின் கீழ் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை ?

ஆ. மேற் கூறப்பட்ட வினா இல அ(1) இல் குறிப்பிடப்பட்டுள்ள தாபனங்களுள் கூட்டுறவு நியதிச் சட்டத்திற்கு மற்றும் விதிகளுக்கு இணங்க புலன் விசாரணைக்காக விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ள தாபனங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? அவை யாவை ?

இ.
- i. இவ் வருடத்தின் அவதானிப்புக்கு இணங்க மூடப்பட உத்தேசித்துள்ள பிரதேச / வங்கி / சூப்பர் விற்பனை நிலையங்கள் காணப்படுகின்றனவா ? அவை எவை ?
- ii. அந்த இனங்காணப்பட்ட தாபனங்களை உரிய நிலைக்கு கொண்டு வர முடியாதவிடத்து அவ்வாறு வர முடியாமைக்கு உரிய காரணம் என்ன ?
- iii. அதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள, மற்றும் எடுக்கவுள்ள நடவடிக்கைகள் எவை ?
- iv. அவ்வாறு இனங்காணப்பட்ட நபர்கள், பெயர் மற்றும் பதவிகளின் அடிப்படையில் யார் ?

ஈ.
- i. மேலே பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் தொடர்பாக நாட்டின் பொதுச் சட்டத்திற்கு இணங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதா ? அது யார் தொடர்பானது ?
- ii. அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்படவில்லையாயின் அதற்குக் காரணம் என்ன ?

**03.** **கௌரவ எம்.ரோஸ் பிரணாந்து உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு, மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/74)**

அ. மேல் மாகாணத்தில் உரிய முறையில் கழிவுகளை அகற்றும் செயற்பாடு பிரதேச சபை, நகர சபையின் மூலம் இன்றும் சிறப்பாக இடம் பெறுவது இல்லை என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. கழிவுகளை வர்க்கப்படுத்தி அகற்றுவது தொடர்பான முறையினை அறிமுகப்படுத்துவது இப் பிரச்சினைக்கு வழங்கக் கூடிய தீர்வு ஒன்றாகுமா ?

இ. வேறாக்கப்பட்ட கழிவுகளை மீள்பயன்பாட்டிற்கு உட்படுத்தி வளம் ஒன்றாக அல்லது வருமானமாக மாற்றுவதற்கு உரிய முறையினை நீங்கள் அறிமுகப்படுத்துவீர்களா ?

ஈ. உங்கள் அமைச்சினால் இது வரை மேற்கொள்ளப்பட்ட கழிவு அகற்றல் தொடர்பான வேலைத் திட்டத்தின் முன்னேற்றத்தினை இச் சபைக்கு முன்வைப்பீர்களா ?

உ. பெருந் தெருக்களின் இரு பக்கங்கள், மற்றும் கால்வாய் வழி, கான் அமைப்பினுள் கழிவுகள் விடப்படுவதைத் தவிர்க்க நீங்கள் தயாரித்துள்ள வேலைத்திட்டம் என்ன ?

ஊ. கட்டான பிரதேச செயலாளர் பிரிவினுள் கட்டுநாயக்க - சீதுவ நகர சபையின் எல்லையினுள் அம்பலமுல்ல அரச காணியில் வெளிப்பகுதியில் கழிவுப் பொருட்கள் போடப்படுகின்றன என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

எ. அந்தக் கழிவுகள் விடுவிப்பதை ஒழுங்கான முறையில் முகாமைத்துவம் செய்ய நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா ?

ஏ. இல்லையாயின் ஏன் ?

**04.** **கௌரவ லக்ஷ்மன் நிபுணாரச்சி உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத்துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/76)**

அ.
- i. தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் தெஹிவளை - கல்கிஸ்சை சுப்பர் விற்பனை நிலையத்தின் கட்டடத் தொகுதியை உடைத்து அகற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றதா ?
- ii. எவரினால் எடுக்கப்படுகின்றது ?
- iii. காணப்படும் கட்டடத்தை அகற்றிய பின் மேற்கொள்ளப்படும் செயற்றிட்டம் என்ன ?

ஆ.
- i. இவ்வேளையில் வியாபார நிலையத்தினைப் பேணிச் செல்பவர்கள் தொடர்பான மாற்று நடவடிக்கை எது ?
- ii. கட்டடத்தினை உடைக்க முன் மாற்றுத் தீர்வினை பெற்றுக் கொடுக்கும் படி வியாபாரிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர் என்பதனை அறிவீர்களா ?

iii. அவ் வேண்டுகோளை கருத்தில் எடுக்காது தெஹிவளை - கல்கிஸ்ஸ மாநகர சபையினால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்பதனை அறிவீர்களா ?

iv. விடயப் பொறுப்பு அமைச்சர் என்ற ரீதியில் இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கை யாது ?

**05.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/77)**

அ. 2016 ஆம் ஆண்டில் பண்டாரகம பிரசே சபையின் மூலம் “மைத்ரி வெசக் வலையம்” என்ற பெயரில் புத்த பிரானின் மூன்று நிலைகளையும் ஞாபகப்படுத்தும் நிகழ்ச்சித் திட்டம் ஒன்று நடைபெற்றது என்பதனை அறிவீர்களா ?

ஆ. அப்படியாயின் அவ் வருடத்தில் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக சபை நிதியத்தில் எவ்வளவு நிதி செலவு செய்யப்பட்டது ?

இ. அதற்காக நன்கொடையாளர்களிடமிருந்து உதவியாக எவ்வளவு அளவு நிதி சேகரிக்கப்பட்டது ?

ஈ. அப்படியாயின் நன்கொடை வழங்கிய தாபனம் மற்றும் நன்கொடை நிதியின் அளவினை வெவ்வேறாக சபைக்கு சமர்ப்பிப்பீர்களா ?

உ. இவ் வகையில் சென்ற வருடங்களிலும் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காக நிதி செலவு செய்யப்பட்டுள்ளதா ?

ஊ. அது எவ்வருடத்தில் ? எவ்வளவு நிதி ?

**06.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/78)**

அ. பண்டாரகம பிரதேச சபையின் மூலம் நிர்வகிக்கப்படும் “மைத்ரி ஆரம்ப பாடசாலை” வளவில் நாட்டப்பட்டிருந்த தேக்க மரம் அகற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அப்படியாயின் அத் தேக்க மரத்தினை வெட்டி அகற்ற காரணம் யாது ?

இ. அந்த மரம் பிரதேச சபையின் சட்டதிட்டத்திற்கு கீழேயா வெட்டி வீழ்த்தப்பட்டது ?

ஈ. அம் மரத்தில் இருந்து வெட்டி எடுக்கப்பட்ட மரங்கள் எந்த நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டன ?

**07.** **கௌரவ லலித் எல்லாவல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி : (கே/vi (1)16/79)**

அ. பண்டாரகம பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு உரிய அளுத்கம மத்துகம பான்சாலை வீதியை புனரமைப்பு செய்வதற்காக 2014 ஆம் ஆண்டு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ஆ. அப்படியாயின் அவ் ஒப்பந்தத்திற்கு இணங்க அவ் வீதியின் புனர் நிர்மான நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதா ?

இ. அவ் ஒப்பந்தம் செய்த நபருக்கு அல்லது சங்கத்திற்கு எவ்வளவு முற்பண நிதி செலுத்தப்பட்டு உள்ளது ?

ஈ. அந் நிதி எவ் வருடத்தில் வழங்கப்பட்டுள்ளது ? எத் தினத்தில் ?

உ. அவ் வீதி ஒழுங்கான முறையில் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது என்பது தொடர்பாக திருப்திப்படுகின்றீர்களா ? இல்லையாயின் ஏன் ?

**08.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ கல்வி, கலை கலாச்சார நடவடிக்கை, விளையாட்டு மற்றும் இளைஞர் விவகாரம், தகவல் தொழினுட்பம் தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23**

ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :
(கே/vi (1)16/80)

அ. i. மே.மா/நீர்/புனித பீட்டர் வித்தியாலயம், வசியாவத்தையின் அதிபர் எத்தினத்தில் இருந்து நியமிக்கப்பட்டுள்ளார் ?

ii. அவ் அதிபர் சேவை வகிக்கும் தரம் என்ன ?

iii. இப் பாடசாலை எவ் வகைக்கு உட்படுகின்றது ?

iv. இவ் அதிபருக்கு இப் பாடசாலையில் இருக்க முடியுமா ?

ஆ. i. இவ் அதிபர் கடமையை பொறுப்பேற்கும் போது பாடசாலையில் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனை ?

ii. பாடசாலையில் தற்போது உள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை எத்தனை ?

இ. i. போசனசாலையை டென்டர் இட்டபோது, காவலாளிகளுக்கு கொடுப்பனவுக்காக நிதி சேகரித்த போது, வர்ணப் பூச்சி பூசுவதற்காக நிதி சேகரித்த போது ஏற்பட்டுள்ள முறை கேடான கொடுக்கல் வாங்கல் தொடர்பாக எடுத்த நடவடிக்கை யாது ?

ii. நீர்கொழும்பு வலையக் கல்விக் காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டு ஊழல் மோசடிக் குழுவிற்கு கிடைக்கப் பெற்ற முறைகேடுகள் தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது ?

iii. இது தொடர்பாக நீங்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளீர்களா ?

ஈ. i. இவ் அதிபர் பாடசாலை பிள்ளைகளுக்கு பொய்யான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி உளத்தாக்கத்திற்கு உட்படுத்துகின்றார் என்பதனை அறிவீர்களா ?

ii. இது தொடர்பாகவும் மற்றும் நிதி முறைகேடு தொடர்பாகவும் விசாரணை ஒன்று மேற்கொள்ளப் பட்டுள்ளதா ?

iii. அதன் முடிவு என்ன ?

iv. இல்லையாயின் விசாரணையினை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்பீர்களா ?

v. அதை எப்போது ஆரம்பிப்பீர்கள் ?

**09.** **கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் , சட்டம் ,ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் 2016.08.23 ஆந் திகதி கேட்கப்பட்ட கேள்வி :**
**(கே/vi (1)16/81)**

அ. i. மஹர பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் கடவத்தை எல்தெனிய அதிவேக வீதியிற்கு பிரவேசிக்கும் பண்டாரநாயக்க மாவத்தைக்கு அருகில் பெருமளவான ஏக்கர் வயல் காணி நிரப்பப்பட்டுள்ளது என்பதனை அறிவீர்களா ?

ii. அக் காணி மஹர பிரதேச சபைக்கு கையேற்கப்பட்டுள்ளதா ?

iii. அப்படியாயின் அது எவ்வாறு ? எவரினால் ?

iv. அதற்காக செலுத்தப்பட்டுள்ள இளப்பீடு எவ்வளவு ?

ஆ. i. இந்த நிரப்பப்பட்டுள்ள வயல்களின் வரம்பின் எல்லையில் 12 அடி அகலமான வீதி ஒன்று காணப்பட்டது என்பதனை அறிவீர்களா ?

ii. அதன் அகலத்தை 8 அடி வரை குறைப்பதற்கு உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

iii. அவ் வீதிக்காக 15 அடி அகல வீதி ஒன்றினை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பீர்களா ?

இ. i. வயல் காணியானது விவசாயிகளை திசை திருப்பி தனிப்பட்ட முறையில் பீ.ஏ. ஜயந்தகுமார பிரேமலால் என்பவரின் பெயருக்கு மாற்றப்பட்டுள்ளது என்பதனை நீங்கள் அறிவீர்களா ?

ii. இது தொடர்பாக விசாரணை ஒன்றினை மேற்கொள்வீர்களா ?

**10.** **கௌரவ சுனில் வடகல உறுப்பினரினால் கௌரவ முதலமைச்சர் மற்றும் நிதித் திட்டமிடல் ,சட்டம் , ஒழுங்கு , பொறியியல் சேவை, உள்ளூராட்சி , மாகாண நிர்வாகம் , பொருளாதார மேம்பாடு, மின்சக்தி மின்வலு, சுற்றாடல் நடவடிக்கை, நீர் வழங்கல், வடிகாலமைப்பு மற்றும் சுற்றுலாத் துறை தொடர்பான அமைச்சரிடம் கேட்பதற்கு :** **(கே/vi (1)16/82)**

அ. மேல் மாகாண சபையுள் இவ வேளையில் கடமையாற்றும் இலங்கை கணக்காளர் சேவைக்கு உரிய அலுவலகர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஆ. அவ் உத்தியோகத்தர்கள் தற்போது கடமையாற்றும் இடங்கள் எவை ?

இ. மேல் மாகாண சபையினுள் இலங்கை கணக்காளர் சேவையின் அங்கீகரிக்கப்பட்ட அலுவலகர்களின் எண்ணிக்கை எவ்வளவு ?

ஈ. அதற்கு இணங்க கணக்காளர் சேவையில் எத்தனை வெற்றிடங்கள் மேல் மாகாண சபையினுள் காணப்படுகின்றன ?

உ. எவ்வளவு காலம் தொடக்கம் இவ் வெற்றிடங்கள் காணப்படுகின்றன எனக் குறிப்பிட முடியுமா ? இல்லையாயின் ஏன் ?

## VI. வருகை தராமல் இருக்க அங்கீகாரம் பெறும் யோசனை

## VII. அமைச்சுக்களின் அறிவிப்புக்களும்/அமைச்சர்களின் தகவல்களும்

## VIII. தனிப்பட்ட தெளிவுபடுத்தல்கள்

## IX. தனிப்பட்ட உறுப்பினர்களின் நடவடிக்கைகள்

### 01. கௌரவ லலித் எல்லாவல அவர்கள்

மேன்மை தங்கிய ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன அவர்களினது புதிய அரசின் மூலமும், சென்ற அரசினால் மேற்கொள்ளப்பட்டது எனக் கூறப்படும் ஊழல் மோசடி ஆட்கொலை, அரச சொத்துக்களின் முறைகேடான பாவனை தொடர்பாக இவ் வேளையில் குழு ஒன்றினை நியமித்து தவறிழைத்தவர்களை சட்டத்தின் முன் கொண்டுவந்து தண்டனை வழங்குவதற்கு திட்டமிடுவது மகிழ்ச்சிக்கு உரிய விடயம் ஒன்றாகும்.

1989 மற்றும் 1990 கால எல்லையினுள் இந் நாட்டில் மிகப் பாரிய அளவாக அரச சொத்துக்களை அழித்து ஒழித்த, மனித உயிர்களை அழித்த காலம் அண்மைக்கால இலங்கை வரலாற்றில் இடம்பெறவில்லை எனவே இது தொடர்பாக ஆராய்ந்து பார்ப்பதற்கு குழு ஒன்றினை நியமித்து அவ் அரசாங்கச் சொத்துக்களை அழித்து மனித உயிர்களைக் கொன்ற நபர்களுக்கு சட்டத்தின் மூலம் தண்டனை வழங்கவும் மற்றும் அழித்து ஒழிக்கப்பட்ட அரசாங்க சொத்துக்களின் பெறுமதியை உரிய தவறிழைத்தவர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுக்குமாறும் மேன்மை தங்கிய ஜனாதிபதியிடம் இம்மேல் மாகாண மாகாண சபை கேட்டுக் கொள்கின்றது. **(பி/vi (1)15/02)**

2016.08.09 மற்றும் 23 ஆந் திகதிகளில் நடைபெற்ற சபைக் கூட்ட நடவடிக்கைகளுடன் தொடர்புடையது

### 02. கௌரவ மஹிந்த ஜயசிங்ஹ அவர்கள்

பாடசாலைகளுக்குப் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்வதில் பாரிய சிக்கல் மிக்க நிலைமை ஒன்றாக ஏற்பட்டுள்ளது.

முதலாம் தரத்திற்கும் மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக ஏனைய தரங்களில் பிள்ளைகளை ஆட்சேர்க்கும் முறைக்கு இணைந்த வகையில் மிகவும் ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதும் அந்த ஏனைய தரங்களுக்காக பிள்ளைகளை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு அவ்வாறான ஒழுங்காக வேலைத் திட்டம் ஒன்றில்லை எனவே பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது பல்வேறுபட்ட கையூன்றல்களைப் பெறுதல் ஊழல் மோசடி போன்ற பல்வேறுபட்ட முறைகேடுகள் இடம்பெறுகின்றன என்பதனை கேள்விப்படக் கூடியதாக இருக்கின்றது.

எனவே முதலாம் தரத்திற்கு மற்றும் ஆறாம் தரத்திற்கும் பிள்ளைகளை ஆட்சேர்த்துக்கொள்ளும் போது தற்போது நடைமுறையில் உள்ளதும், அதேபோல் ஏனைய தரங்களுக்கு பிள்ளைகளை ஆட்சேர்ப்பதற்காக மிகவும் சிறந்த ஒழுங்கான வேலைத் திட்டம் ஒன்றினைத் தயாரித்து மேல் மாகாண சபையின் பாடசாலைகளில் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கை எடுக்குமாறு உரிய எல்லா பகுதியினரிடமும் வேண்டுகோள் விடுக்க வேண்டும் என இம் மேல் மாகாண மாகாண சபை கருதுகிறது. **(பி/vi (1)15/04)**

## X. சபை ஒத்திவைப்பு

கே.எச்.டி.கே. சமரக்கோன்
செயலாளர்,
மேல் மாகாண மாகாண சபை

2016.08.24 ஆந் திகதி
சபைச் செயலாளர் காரியாலயம் (மே.மா)
மேல் மாகாண மாகாண சபை,
5ஆம் மாடி, Bஅலகு,
செத்சிறிபாய,
பத்தரமுல்ல.